| நம்மையும் நாட்டு மக்களையும் காப்போம் | தொற்றிலிருந்து தமிழகத்தை மீட்போம் |
|---|---|

செ.வெ.எண். 25 நாள்:17.6.2021

# *கொரோனா தொற்று பாதிப்புள்ளாகி குடும்பத்தில் வருமானம் ஈட்டக்கூடிய நபர் இறந்திருப்பின் அவர்களின் குடும்பம் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் தேசிய பட்டியலினத்தவர் நிதி மற்றும் மேம்பாட்டு கழகம் (NSFDC) நிறுவனத்தில் "ஆஷா" என்ற திரும்ப செலுத்தும் கடன் திட்டம்.*

## *கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தகவல்*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொடர்ந்து பல்வேறு நடவடிக்கை மேற்கொண்டதின் அடிப்படையில் தற்போது நோய்த்தொற்று குறைந்து வருகிறது.

அதனடிப்படையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மக்கள், கொரோனா தொற்று பாதிப்புள்ளாகி குடும்பத்தில் வருமானம் ஈட்டக்கூடிய நபர் இறந்திருப்பின் அவர்களின் குடும்பம் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் தேசிய பட்டியலினத்தவர் நிதி மற்றும் மேம்பாட்டு கழகம் (NSFDC) நிறுவனத்தில் "ஆஷா" என்ற திரும்ப செலுத்தும் கடன் திட்டம்.

ஆதிதிராவிடர் மக்கள், கொரோனா தொற்று பாதிப்புக்குள்ளான குடும்பத்தில் வருமானம் ஈட்டக்கூடிய நபர் இறந்திருப்பின் அவர்களின் குடும்பம் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் தேசிய பட்டியலினத்தவர் நிதி மற்றும் மேம்பாட்டு கழக நிறுவனத்தால் "ஆஷா" என்ற திரும்ப செலுத்தும் கடன் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாகவும் மற்றும் அத்திட்டத்திற்காக வரைவு வழிகாட்டுதலில் **இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் பயனாளிகள் கீழ்கண்ட தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.**

- பயனாளிகள் ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும்.
- குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்குள் இருக்கவேண்டும்.
- குடும்ப வருமானம் ஈட்டக்கூடிய இறந்தவர்களின் வயது 18 முதல் 60க்குள் இருக்கவேண்டும்.
- இத்திட்டத்தில் அதிகபட்சமாக திட்டத்தொகை ரூ.5.00 இலட்சம் வரை இருக்கலாம்.
- திட்டத்தொகை 80% சதவீதம் (அல்லது) அதிகப்பட்சமாக ரூ.4.00 இலட்சம் வரை கடன் NSFDC நிறுவனத்தால் வழங்கப்படும்.

- மீதமுள்ள 20 சதவீதம் (அல்லது) ரூ.1.00 இலட்சம் வரை மானியம் வழங்கப்படும்.

- இக்கடனுக்கு ஆண்டுக்கு 6.5 சதவீதம் என்ற வட்டி விகிதத்தில் கடனை 6 ஆண்டுகளுக்கு திரும்ப செலுத்தலாம்.

- குடும்பத்தில் வருமானம் ஈட்டக்கூடிய நபர் கொரோனா தொற்றினால் தான் இறந்துள்ளார் என்பதற்கான உரிய ஆவணங்கள் சமர்பிக்க வேண்டும்.

இது தொடர்பாக 04343-238881 என்ற அலுவலக தொலைபேசிஎண் அல்லது மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட மேலாளர், தாட்கோ அலுவலகத்தை தொடர்புகொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் கிருஷ்ணகிரி.

| | |
|---|---|
| **முககவசம் அணிவீர்** | **தனி மனித இடைவெளி கடைப்பிடிப்போம்** |